## மக்கள் போற்றும் மகத்தான தலைவர் - நாடு போற்றும் நல்லாட்சி நாயகர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் 73-வது பிறந்தநாள்!

## குடியரசுத் தலைவர் - பிரதமர் - ராகுல்காந்தி - ஒன்றிய அமைச்சர்கள் - முதல்வர்கள் - ஆளுநர் - கட்சித் தலைவர்கள் வாழ்த்து!

**சென்னை, மார்ச் 3-**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 73-வது பிறந்தநாள் விழா நேற்று முன்தினம் தமிழகம் முழுவதும் கொண்டாடப் பட்டது. இதனை யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினை விடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். முதல்வருக்கு குடியரசுத் தலைவர், பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, கேரள முதல்வர், கட்சித் தலைவர்கள், வாழ்த்துத் தெரிவித்தனர். அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் அவர்கள் நான்கு மணி நேரத்திற்கு மேலாக நின்றபடியே தொண்டர்களின் வாழ்த்தைப் பெற்றார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.3.2026) தனது 73வது பிறந்தநாளையொட்டி சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து!

**தொலைபேசியில் தெரிவித்தார்!**



சென்னை, மார்ச் 3 -

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நேற்று முன்தினம் (1.3.2026) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, தொலைபேசி வாயிலாக முதல்வர் அவர்களை தொடர்புகொண்டு, பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

எல்லோருக்கும் எல்லாம் தகைசால் சான்றோர், தாய்மார்கள், இளைஞர்கள், மாணவர்கள் போற்றும் நல்லாட்சி நாயகர் தந்தை பெரியாரின் சமூக நீதியையும், பேரறிஞர் அண்ணாவின் மாநில சுயாட்சிக் கொள்கையையும், தமிழினத் தலைவர் கலைஞரின் சமூக நலத் திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் திமுக தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தனது 73வது பிறந்தநாளை நேற்று முன்தினம் கொண்டாடினார்.

**பேரறிஞர் அண்ணா, கலைஞர் நினைவிடங்களில் மரியாதை!**

இதனையொட்டி, சென்னை மெரினாவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதைத்தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தும், மலர் தூவியும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

இதையடுத்து, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் பணியாற்றக்கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இந்த நிகழ்வுகளின்போது, திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திமுக முதன்மை செயலாளர் கே.என்.நேரு மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்த்து!

**தொலைபேசியில் தெரிவித்தார்!**



சென்னை, மார்ச் 3-

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதல்வர் அவர்களை, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் நேற்று முன்தினம் (1.3.2026) தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

**தந்தை பெரியார் நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை!**

இதைத்தொடர்ந்து, சென்னை வேப்பேரியில் பெரியார் திடலில் அமைந்துள்ள, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் நினைவிடத்தில், மலர் வளையம் வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். அப்போது, திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி, முதலமைச்சருக்கு பெரியார் புத்தகத்தை வழங்கியும், இனிப்பு ஊட்டியும் தனது மனமார்ந்த வாழ்த்தினை தெரிவித்தார்.

**கோபாலபுரம், இல்லம்!**

பின்னர், சென்னை கோபாலபுரம் இல்லம் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அங்கு முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

**சி.ஐ.டி. இல்லம்!**

தொடர்ந்து, சிஐடி காலனியில் உள்ள இல்லத்துக்கு சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், ராஜாத்தி அம்மாளிடம் வாழ்த்து பெற்றார். நாடாளுமன்ற திமுக குழுத்தலைவரும், திமுக துணை பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி உடனிருந்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது பிறந்தநாளையொட்டி, சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்களை நான்கு மணிநேரத்துக்கும் மேலாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி, சென்னை அண்ணா அறிவாலயம் விழாக் கோலம் பூண்டுள்ளது. திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு, முதலமைச்சரின் பிறந்த நாளை உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர். காலை முதலே திமுக நிர்வாகிகளும், தொண்டர்களும் திரண்டனர். அண்ணா அறிவாலயத்திற்கு வந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பளித்தனர். பின்னர், அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் வாழ்த்து கூறினர். முதலமைச்சர் பிரம்மாண்ட கேக் வெட்டி தனது பிறந்தநாளை கொண்டாடினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கலைஞானி கமலஹாசன் எம்.பி. வாழ்த்து!

**தொலைபேசியில் தெரிவித்தார்!**



சென்னை, மார்ச் 3 -

முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதல்வர் அவர்களை, மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கலைஞானி கமலஹாசன் எம்.பி. அவர்கள் நேற்று முன்தினம் (1.3.2026) தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

## 4 மணி நேரத்துக்கும் மேலாக நின்றபடியே தொண்டர்களின் வாழ்த்தைப் பெற்றார்!

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ராகுல் காந்தி வாழ்த்து!



புதுடெல்லி, மார்ச் 3 -

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் 73 வது பிறந்த நாளையொட்டி, அவருக்கு காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி அவர்கள் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

ராகுல்காந்தி தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள முதல்வர் அவர்களின் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியில், "நல்ல ஆரோக்கியம் - வலிமை மற்றும் தமிழ்நாட்டு மக்களுக்கு நீண்ட காலம் தாங்கள் அர்ப்பணிப்புடன் சேவை செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**தி.மு.க. கூட்டணி கட்சித்தலைவர்கள் முதலமைச்சருக்கு பிறந்த நாள் வாழ்த்து!**

திமுக கூட்டணி கட்சித்தலைவர்களும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை, மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ், காங்கிரஸ் முன்னாள் மாநிலத்தலைவர் கே.வி.தங்கபாலு, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் பாலகிருஷ்ணன், மனிதநேய மக்கள் கட்சித்தலைவர் ஜவாஹிருல்லா, தமிழக வாழ்வுரிமை கட்சித்தலைவர் வேல்முருகன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, முக்குலத்தோர் புலிப் படை தலைவர் கருணாஸ், மக்களவை உறுப்பினர் துரை வைகோ உள்ளிட்டோர் முதலமைச்சருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

இதேபோன்று, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், முன்னாள் மக்களவை உறுப்பினர் ரவீந்திரநாத்தும் முதலமைச்சரை சந்தித்து பிறந்த நாள் வாழ்த்துக்கூறினர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த், கலைஞானி கமலஹாசன் உள்ளிட்ட திரையுலகினர் வாழ்த்து தெரிவித்தனர்.

முதல்வர்அவர்களின்பிறந்தநாளையொட்டி நேற்று, முன்தினம் முதல்வர் அவர்களுக்கு குடியரசுத் தலைவர் சி.பி.இராதாகிருஷ்ணன், பிரதமர் நரேந்திரமோடி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, ஒன்றிய அமைச்சர்கள், ஆளுநர் ஆர்.என்.ரவி ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.

**முதல்வர்கள் வாழ்த்து!**

கேரள முதல்வர் பினராயி விஜயன், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி, சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் ஆகியோர் முதல்வருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

---



மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஸ்டாலின் மகளிர்படை பயிற்சி பாசறை கூட்டத்தின் முடிவில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் செல்போன் விளக்குகளை ஒளிர செய்து பரப்புரைக்கு ஆயத்தமாயினர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. ராஜமாணிக்கம், மாவட்ட ஊரட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலாம் ஜி.பாலு, நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன்,நகர செயலாளர் வீரா. கணேசன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஷோபா கணேசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



திருப்பூர் மாவட்டம், பல்லடம் வெங்கட்டாபுரத்தில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் ரூ.45.00 கோடி மதிப்பீட்டில் பல்லடம் பொள்ளாச்சி இருவழிச் சாலையினை நான்குவழிச் சாலையாக மேம்பாடுத்தும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் விஸ்வநாதன், கோட்டப் பொறியாளர் இரத்தினசாமி, பல்லடம் நகர செயலாளர் ந.ராஜேந்திரகுமார், பொங்கலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜே.சி.பி. எஸ்.பாலுச்சாமி, மாவட்ட முன்னாள் அவைத்தலைவர் கே.திருமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஈ.பாலசுப்பிரமணியம், ஒன்றிய துணை செயலாளர் இச்சிபட்டி சிவக்குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.